




ஓலை 112| ஓசை 235| மார்ச் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அகன்அமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்

## பொருள்

முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப்பெற்றால்,
மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு!

**நேரிசைச் சிந்தியல் வெண்பா- அந்தாதி**

விண்ணிற்கே மட்டுமல்ல, மண்ணிற்கும் செங்கதிரைக்
கண்திறந்து போற்றும்முக் கண்ணனாய் – எண்ணி
வணங்கும் சிவனே வணங்கு




வணங்கித் தவப்பயன் வாய்த்திடப்பெற் றோரை
வணங்கிடுவா(ய்); என்றென்றும் வாய்த்த –குணமுடைய
முக்கண் சிவனேதான் முந்து

முந்தும், பிறப்பின் முனைமழுங்கா நல்வினைதான்
வந்தே பிறப்பினில் வாய்த்திடவே – நந்தியேறும்
வாகனனா(ய்) எண்ணுதல் மாண்பு.

மாண்பும் ஒழுக்கமும் மாந்தநேய நல்லறமும்
காண்பதே வாழ்வின்முக் கண்ணனாகும் – ஊண்மறந்தே
செய்தவமு(ம்) அன்பே சிவம்.

சிவமென்றே வையத்துச் சீருழைப்பர் தம்மை
உவந்துபோற்றல் உற்றச் சிவமே – எவனும்
தவப்பயனாய் ஏற்றியே தாங்கு.

தாங்கியே ஏணியாய்த் தானுயர வைக்கின்ற
ஓங்குகல்வி யாசிரிய(ர்) உற்றதொரு – பாங்குடையோர்:
தாங்கி வணங்குசிவம் தான்.




தானென்றே ஆடும் தறுக்கர் சிவமென்பார்:
ஊனெண்ணி வாடா துவந்துசிவம் – தானெனினும்
உண்மைச் சிவத்தை யுணர்.

உணர்ந்தே தவவலிமை உற்றுநோக்கி உள்ளக்
குணத்தைச் சிவமாகக் கூட்டு – மணக்கும்
சிறுநெஞ்சந் தானே சிவம்.

**இலக்கணக் குறிப்பு:**
இரண்டடிகள் நான்கு நான்கு சீர்கள் வந்து, மூன்றாமடி மூன்று சீர்கள் வந்து, மூன்றாம் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்து வரும். மூன்றடிக்கும் ஓரெதுகையாகவோ வேறு எதுகையோ வரலாம். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். இரண்டாம் அடியில் தனிச் சொல் வரும் நிலைமொழி கு, சு, டு, து, பு, று என்று முடிந்து வரும். மொழி உயிரெழுத்துக்கள் வந்தால் ஓரெழுத்துக் குறைந்து தளை பிழையாகும். ஆகவே குற்றியலுகரம் நோக்க வேண்டும். ஒரு பாட்டு முடிந்ததும் அந்தப் பாட்டின் ஈற்றுச் சீரை வைத்து அடுத்தடியைத் தொடங்குவது அந்தாதியாகும்.

நேரிசை வெண்பா.

உலகின் மொழியாய் உணர்ச்சி மொழியாய்
பலரும் விரும்பிடும் பண்பும்–அலங்கல்
இலங்கும் மறைகள் இருந்துமே தாயாய்
உலவுவாய் எங்கும் உவந்து.




குறள் வெண்பா.

செந்நெறி காட்டிடும் செம்மொழி என்றுமே
செம்மை உடையதெனச் செப்பு.

இலக்கினைக் காட்டும் இயலுடை நூல்கள்
இருக்கும் மொழியே இசை.

நேரிசை வெண்பா.

ஆதியிலே தோன்றிய அன்னை மொழியிதே
ஆதிரையான் வேட்ட அருந்தமிழ்–ஆதி
மொழியாய் அறமே மொழிமை உரைக்கும்
மொழியின் சிறப்பை மொழி.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# தையலை உயர்வு செய்




பெண்ணைப் போற்றிடு
பெருமிதம் அடைந்திடு
அன்பை வளர்த்திடு
அன்னையை வணங்கிடு

மாதரை மதித்திடு
மாண்பைக் காத்திடு
நன்மையே செய்திடு
நங்கையை வாழ்த்திடு

இன்முகத்துடன் எந்நாளும்
இணைந்தே இருந்திடு
சினத்தை காட்டி
சிறுமை அடைந்திடாதே

பண்பாட்டை மறந்து
பகுத்தறிவை இழந்திடாதே
ஆற்றல் பெண்ணிலுண்டு
ஆளுமையும் அவளிலுண்டு

தொல்லை தந்திடாதே
துன்பத்தில் வீழ்ந்திடாதே
கண்ணாய் மதித்திடுவோம்
கருத்தினில் நிலைத்திடுவோம்

எண்ணத்தை சீராக்கி
அறிவுடைமை பெறுவோம்
மனிதா தையலை
உயர்வு செய் நீயுமே

அவனியில் பிறந்திட
அவளின்றி நடந்திடுமா
ஓராயிரம் நன்மைதனை
ஒன்றிணைந்து பெற்றிடுவாயே

மங்கையில்லா வாழ்வது
பாழாகிடுமே உணர்ந்திடு
வசந்தமும் அவளாலே
வாழ்வும் வளமாகுமே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# சீவக சிந்தாமணி (பதினேழு)

4. குணமாலையார் இலம்பகம்



கண்டதுமுதல் எங்கு பார்த்தாலும் சீவகன்.
பெண்ணின் சிந்தனை முழுவதும் அவனே
கண்களில் எழுதிய மை கரைந்தது
கண்ணைக் கவரும் உடல் பசலை

குணமாலை தன்னிலை மறந்தாள் காதல்
மணமுடிக்க யாரை விழைந்தாளோ அவனே
கணவனாக வரும் நாள் எப்போது ?
உணவு உறக்கம் உன்னதம் இழந்தாள்
( உன்னதம் : மேன்மை)

வேள்வித் தீயில் இட்ட தாமரையானாள்
ஒளியிழந்த கண்கள் கைவளையல் கழல
மீளாத்துயரத்தில் செயலறுதல் பொருந்தி
கிளியிடம் வருந்தி காதலைக் கூறினாள்

தூது சென்றது கிளி சீவகனிடம்
மாதுவின் கண்ணீர்க் கதைகொட்டியது
மாதவன் அவள் உள்ளத்தை உணர்ந்தான்
காதலை ஏற்று கடிதம் அனுப்பினான்

நலந்தானா? விரைவில் மணம் முடிப்பேன்
நல்ல செய்தி கடிதத்தைப் படித்தாள்
மெல்ல மனம் ஆறுதல் அடைந்தாள்
செல்லக் கிளியை மார்போடு அணைத்தாள்

பெற்றோர் அவள் உள்ளத்தை அறிந்தனர்
உற்றோர் கலந்து பேசி சம்மதித்தனர்
உற்றபடி சீவகன் விவரம் அறிந்தனர்
மற்றபடி சம்பந்தம் பேச தயாராயினர்

" யாம் எம் மகளைத் தருகிறோம்
நீர் அவளைக் கொள்மின் மருமகளாக"
எவரும் மகளைக் கொடுக்க இசையார்
யாம் மகட் கொடை விரும்பித் தருகிறோம்
( குணமாலை தந்தை குபேரமித்திரன்
தாய் : வினயமாலை மணம்பேசினர் )
சீவகன் பெற்றோர்: கந்துகன், சுநந்தை )

கண்ணுக்கு அழியாத காமனானான் சீவகன்
மனம் பொருந்திய கூந்தலாளை மணந்தான்
இருமனமும் ஒருயிராய் இன்புற்று இருந்தனர்
திருமணச் செய்தி அறிந்தான் கட்டியங்காரன்

"அதற்கு காரணம் யாது வினவினான்
மதகளிர் பட்டத்து யானை அசனிவேகம்
மதங்கொண்டு வீதிகளில் அலைபாய
அதனோடு போரிட்டு அடக்கியவன் சீவகன்"
குணமாலையார் இலம்பகம்

தொடரும்...

கவிஞர் ந. திருக்கேரமு

# காதல் பூ

கிளைகள்
எத்தனையோ
தழைக்கின்றனதான்.
இலைகள்
எப்போதும்
துளிர்விடுகின்றனதான்.



ஆனால்,
வேருக்குள்
ஒளிந்திருந்த பூ
கிளை நுனியில்
வெளிப்பட்டது போல இருந்தது
உன் மீதான காதல்
உன்னைக் கண்டதும்.

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில் ஏறாவூர் (இலங்கை)

# காகிதத்தின் காதலி

காகித கிறுக்கலில் காற்று வாங்கினேன்
காதலி என்னுள்ளே காதல் சொன்னாள்
கற்பனையில் ஓவியமாய் கசிந்து உருகினேன்
கண்ணாலே பேசி கவிதை ஆனேன்
எண்ணத்தின் ஓட்டம் என்னருகே இருந்தாள்
எதிலும் நாட்டமில்லை என்னவளை நினைத்தேன்
அத்தான் என்று அருகில் நெருங்கினேன்
அமுத மொழியாய் அதிசயம் செய்தாள்
சிரிப்பின் சத்தத்தில் சில்லென மயங்கினேன்
சிற்பமாய் செதுக்கி சின்னத்தையும் கொடுத்தாள்
யாரோ வருவார் யாரோ போவார்
யார் நினைத்தாலும் யாதுமாகி நின்றாள்
எழுதுகோலும் இழுக்க எழுதியே உரைந்தாள்
எனக்கான முகவரியோடு எனதருகே நின்றாள்
இறுதியில் ஒன்றாகி இனிமையாய் இருந்தேன்
காகிதத்தில் வரைந்து காந்தமாய் ஒட்டினேன்
ஏனெனில் அவளும் நானும் இரட்டையர்கள்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# நற்றாய்

எவள் ஒருவள்,
தன் மகனை
நற்றாயாக ஆக்குவாளோ;
அவளே நற்றாய்

சிறு பக்குவங்கள்
சமைக்க கற்க.
பசியறிந்து சோறிட.
கற்பிப்பாள் அவள்.

அவன் இளவல்களின்
பொறுப்பை அவனிடம் விட;
நாளை அவன்,
தன் பிள்ளைக்கு
தன்மையான தாயாகுவான்;
தானாகவே.

அவள் இடர் துன்பம்
அவனுடன் பகிர;
தன் மனையாளுக்கு,
மனம் தொடும்
மாதா ஆகுவான்;
மன மகிழ்வுடன்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

நிலத்தின் மீது நேசம்
கொண்ட வானம்
மழையைக் கொட்டித்
தீர்ப்பதை விடவும்;
பலமடங்கு பாசத்தைக்
கொட்டித் தீர்க்கிறது
குஞ்சுகளிடம் பஞ்சாரத்து
தாய்க்கோழி.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# குடிமை

## அதிகாரம் : 96




செம்மையும் நாணமும்
பொருந்த விளங்குதலென்பது.
உயர்குடிப் பிறந்தோர்க்கன்றி
மற்றோர்க் கமைவதில்லையாம்.

ஒழுக்கம் வாய்மையொடு
நாணமாமிம்மூன்றும் தவறாது.
நன்னெறியில் வாழ்வோர்
உயர்குடிப் பிறந்தோரே.

முகமலர்ச்சியொடு ஈகையும்
இன்சொல்லொடு இகழாமையுமாம்.
இந்நான்கும் உண்மையான
உயர்குடியோரின் நற்பண்புகளாம்.

பலகோடிச் செல்வம்பெறினும்
நற்குடியோர் தன்குடிப்பெருமை.
கெடுக்கும் இழிகுற்றங்கள்
ஒருக்காலும் செய்யார்.

தொன்றுதொட்ட முற்குடிப்பிறந்தோர்
வறுமையால் தான்சுருங்கிடினும்.
பொருள்கொடுத்து உதவும்
பண்பினின்று குறைந்துபோகார்.

மாசற்ற குடிப்பிறப்பினரோடு
ஒத்துவாழும் தன்மையோர்.
வறுமையின் காலத்தும்
வஞ்சனையில் தீமைசெய்யார்.

உயர்குடிப் பிறந்தோரில்
காணுங்குற்றம் சிறிதெனினும்.
முழுநிலவின் களங்கம்போல்
பலரறிய ஓங்கித்தோன்றும்.

ஒருவனின் நற்பண்பிடையே
அன்பற்ற தன்மைகாணின்.
அவனின் குடிப்பிறப்புபற்றி
ஐயப்பட நேரும்.

நிலத்தினியல்பை அதன்மீது
முளைத்தவை சொல்லுமாப்போல்.
உயர்குடியோனின் வாய்ச்சொல்லே
அவனின் இயல்பைக்காட்டும்.

நன்மைவிரும்புவோன் பழிக்கு
அஞ்சிடல் வேண்டுமாப்போல்.
குடியுயர்வு வேண்டுவோன்
பணிந்துநடத்தல் வேண்டுமாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# பழுதான தண்ணீர் தொட்டி

தினமும்
அழுது கொண்டே தான்
இருக்கின்றன

"பழுதான
தண்ணீர்
தொட்டியின் குழாய்கள்"




கவிஞர் கு. விக்னேஷ், வேலூர்

# வேரிழந்த மரமாய்

அழுக்காறு சூழ் படலம்
அவ்வியம் பேசும் திடல்
தீராப் பகை விதைக்கும்
தேரா மன்றம்.

தமிழ் வெறுப்பு உமிழும்
தீயோர் பெருந்திரள்.
வேரிழந்த மரமாய்
தமிழ் நிலம்.



கவிஞர் செ. தமிழ்நேயன் இ தமிழ் நாடு

# பிடிப்பிழந்த உள்ளம்

பற்றிக்கொண்ட கரங்கள் தளர்ந்துவிட்டன
காத்திருந்த விழிகள் கலங்கிவிட்டன.

பொருத்திருவென்று சொன்ன வார்த்தைகள் அனைத்துமே
இன்று மௌனித்துக் கிடக்கின்றன.

ஏங்கித்தவித்துக் கொண்டிருந்த
கனவுகள் கானலெனக் கலைந்துவிட்டன.

கொஞ்சமிரு என்று சொல்லக்கூட முடியாமல்
தொண்டையில் வார்த்தைகள் சிக்கி
மூச்சுத்திணருகின்றன.

இன்னும் என்ன யோசனை என்று மூளை அதட்டிக் கேட்க
வெறுக்கத் தான் முடியும் எதையும் மறக்க முடியாது என்று
இதயம் முணங்கிக் கண்ணீர் சிந்துகிறது.




கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி (கிழக்கிலங்கை)

# விதியை மதியால் வெல்லு

(அந்தாதிக் கவிதை)

*விதியை* சதியென
புலம்பும் மாந்தர்!

மாந்தரின் முயற்சிக்கு
துணையாகும் பயிற்சி!

பயிற்சியில் தெளிந்து
மனிதனே போராடு!

போராட்ட குணமே
வாழ்க்கையின் சிறகு

சிறகடிக்கும் மனிதனே
மண்ணை மறக்காதே!

மறந்தும் கர்வத்தில்
உப்பாக கரையாதே!

கரையாத அகந்தையால்
உனக்கேது வெற்றி?

வெற்றியின் புன்னகை
ஒருபோதும் நிலைக்காது!

நிலையில்லா வாழ்வுக்கு
உறுதியே துணை!

துணையில்லா நிலவோடு
தனிமையில் உறவாடு!

உறவாடும் நம்பிக்கையே
தோழனென சொல்லு!

சொல்வதை காட்டிலும்
முயற்சியுடன் *வெல்லு*!



கவிஞர் அனல் நிலவன், கொசவபட்டி (திண்டுக்கல்)

# உன்னில் நான்

என்னிடம் கேள்விகள் இருந்தது
அதை உன்னிடம்
எப்படி கேட்பது என்றதில்
உழன்றே தோற்று
இளைத்தேன் நான்.

மற்றவர்களோடு நீ ஓடியோடி
பேசுவதைக் காண்கையில்
சில்லு சில்லாய் நொறுங்கினாலும்
உன்னிடம் சொல்லிட முடிந்ததே இல்லை.

அது சாதாரணமாக கடக்குமா?
சாதா ரணமாக நீ நினைத்தால் என்னாகும்.
எனது வலி பெரிது
ஆனால் உந்தன் பார்வையில் தூசாகிடுமோ?

அவ்வப்பொழுதினில்
நீ விடும் உரிமைக் கோரலில் கூட
எத்தனை மகிழ்வாகிறேன்.

அது கடகடவென கொட்டும் மழைத்தூறலின்
சப்தத்தை விட மேலானது
உன் வார்த்தைகளின் கடக்கம்.
என்னால் அதை அன்பின் பேராற்றல் தாண்டி
பார்க்க முடிந்ததே இல்லை.

சிற்பங்களை அசைவதில்லை
நினைவுகள் மீட்டாமலில்லை
பொருத்தப்பாடுகளிலே
நிலைப்பாடு உறுதியாகிறது.

உன்னிடமும் எனதான நிலைப்பாடென்ன?
கேள்விகள் என்னிடமே.
மொழியறியாத கிளியென
நானும் விழிப்பிதுங்கி நிற்கிறேன்.



கவிஞர் சுஹைனாஸ் பேகம், முதலைப்பாளி (புத்தளம்)

# வீரமே நீ உடைவதா!

நீதானே வீர மங்கேயே!
தயங்கி தற்காக்க முடியுமா?
அகிலத்தின் முன்பே உன்னை.
எழுவீர் மனிதகுல நல வாரிசாய்
கண்ணகி என்றால் மாமதுரையும் பதில் கூறும்.



தமயந்தி , சீதை என்றே வரலாறு
கன்னிப் பெருமை கொள்ளும்
சப்த தமிழ் கண்ணிமார் மொழி இலக்கணம் கூறும்

பருவம் ஏழறிந்து மந்தை மடந்தை பேரிளம் பெண்ணாகி
பவித்திர பூமி அழகினில் காதல் கூடும்.
அம்மா உலகம் கொண்டாடும் அரியாசானம்
உயிரின் முதல் உறவு.
உங்களின் வரவேற்புக்கு குறைவே
இல்லை கண்ணிமாரே!

காரணங்கள் இன்றி கனவுகள் பிறப்பதில்லை.
நீங்கள் கண்ட கனவு உங்களை யார் என்று கூறட்டும்.
மனமயம் திறந்து மடமை ஒழிக்க வந்தீர் மங்கையரே!
காலத்தின் ஓட்டத்திற்கு கண்ணிய வழி பிறந்ததும்
எந்தன் பூமி உயிர் நிலைப்பதும் உந்தனலே

முதன்மையிலும் முன்னிலை எட்டியதும் உம்மவர் வீரம்.
காவியமான வாழ்வில் பெண்ணள் இல்லை என்றால்
மண்ணவர் விரக்திதான்.
அரவணைப்பு முதல் அன்பு உறவு வரை அவளே.

சக மனிதா! தோழமையுடன் விழி
தலைவியின் வழியை தோழியின் நெறியை

தேசமே பொக்கிஷம் ஆனது பெண்டிரும்
வீரம் கொண்டீர் தாயகம் சிறக்க.

கவிஞர் வியாத்தன் சீ. லக்ஷீஷரன்

# வீழ்வதல்ல எழுவதும்தான்

சருக்காய் சரிவதும்
பின்பு இம்மரமே
துளிர் விடுவதும்.
இயல்பான ஒன்றோ
அதுபோல தான் இவ்வாழ்வுமே
வீழ்தலும் பின்பு
எழுதலும்.
எழுந்தும் வீழ்ந்து மீண்டும்
வீறுகொண்டு எழுதலுமே இவ்வாழ்வு.
வீழ்ந்தால் மட்டும் போதுமா.
வீறுகொண்டு எழுவதும் நாம்தான்
என்பதை சொல்லி அடிக்க வேண்டாம்
சொல்லாமலே அடிக்கலாம்.



கவிஞர் ஸ்ரீ. ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி, மதுரை

# பெண்ணே!

பெண்மையே இயற்கையின்
முழுமையான முகவரி நீ

உன் அழகின் அடையாளம் வீசும்
தென்றல் காற்றில் மௌனமாய்

உன் புன்னகையின் அடையாளம் வசந்த
கால வாசலின் வண்ணங்களாய்

உன் கோபத்தின் அடையாளம் சீறிப்பாயும்
வெள்ளத்தின் சீற்றமாய்

உன் அன்பின் அடையாளம் அடர்ந்த
காடுகளின் ஓங்கார சத்தங்களாய்

உன் வெறுப்பின் அடையாளம் கரையை
கடக்கும் புயலின் கோபமாய்

உன் சோகத்தின் அடையாளம் இலையுதிர்
காலத்தின் கண்ணீர் துளிகளாய்

உன் பாசத்தின் அடையாளம் பச்சையத்தின்
பரப்புரையாய் அகிலமெங்கும்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# மாண்புறு மகளிர் வாழ்க

அகிலம் ஆளும் ஆதி சக்தியே
அன்பைச் சொல்லும் அமுத மொழியே
தடுக்கி விழும் துன்பங்கள் வந்தாலும்
வேதனை தரும் சோதனை கண்டாலும்
கண்ணீர் விடும் கவலைகள் கொண்டாலும்
கலங்காத உள்ளம் கொண்டிடு கண்மணியே!

இலக்கணங்கள் வகுத்து தொடுக்கப்படும் இலக்கிய நயமாய்
வடிக்கப்படும் பெண் கவிதைகள்
சில சமயம் இலக்கணப் பிழையாய் ஆவதுண்டு
பெண்ணியம் எனும் பெருங்கனவு
கேடயமாய் அல்லாமல் ஆயுதமாய் போவதுண்டு

சிறகை விரித்து விண்ணில் பறக்கும் வண்ணப் பறவையாய்
உயரம் தொட்டாலும்
கூட்டை தேடும் தாய்மை உள்ளம் மேன்மை தந்திடுமே
கணிப்பொறியுகத்தில்
உள்ளங்கையில் உலகம் கண்டாலும்
உணர்வுடன் பிணைந்த உள்ளன்பு என்றும் மாறாதே



அடுப்பங்கரை தாண்டாத ஆகாயக் கனவுகள்
வாசற்படி தாண்டாத வானவில் வர்ணங்கள்
வட்டமிட்டு வாழச் சொல்லும் வழமை நியாயங்கள்
அனைத்தையும் கடந்து செல்வீர் சிறு புன்னகையுடன்...

மாதவம் புரிந்து மங்கையராய் பிறந்தீரே
மாபெரும் சபைகளிலே மகுடங்கள் தரித்தீரே
மனைதனில் ஒளியேற்றி மங்களம் சேர்த்தீரே
மனமது தளராமல் எண்ணியது முடித்தீரே
மாண்புறு மகளீரே வாழ்க வாழ்கவே!

கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# குர்ஆனின் மாதமே ரமழான்

வான்மறைத் தூது
வான்வெளி கடந்து
வையகத்தை வந்தடைந்த
வசந்த காலமே
வளமான மாதமே

நெறிபிறழ் மாந்தரை
நன்னெறியில் வாழ்ந்திட
தேசமெல்லாம் ஒளி பாய்ச்சும்
கண்ணிய மாதமே

பாவக் கறைகளைப்
பக்குவமாய்த் துடைத்தெறிய
இரவுக்கு ஒளியூட்டி
இறைவனை நாடியே
இறைஞ்சும் மாதமே

ஏழை எளியோரின்
பசியைப் புரிந்து
தர்மங்கள் பொழிந்திடும்
புண்ணிய மாதமே

இறையோனின் அடிமையாய்
அனுதினமும் வாழ்ந்திட
நல்வழி காட்டிடும்
சங்கைமிகு மாதமே

மேற்குவானின் அடியிலே
கண்வைத்து காத்திருந்து
பிறைமுகம் புன்னகைக்க
பூத்துக்குலுங்கும்
அழகிய மாதமே ரமழான்.




கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி

# என் உயிர் தோழி அவள்

நான் எவ்வளவு வேதனையில் இருந்தாலும்
நான் எவ்வளவு அழுதாலும்
என்னை அழ வைத்து
அழகு பார்க்கும் அழகிய ராட்சசி அவள்
அவள் விரல்களால்
என் கண்ணீர் துளிகளை துடைக்க மாட்டாள்
நானாக அவள் மேல் துடைத்தால்
அத்தனையும் தனக்குள்ளே வாங்கிக்கொண்டு
சில்லென்று சிரிக்கும் சிங்காரி அவள்
இப்படிக்கு "என் தலையணை"



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# மாற்றத்தை நோக்கி!



அன்பிற்கு அடிமையானேன்
அதில் பொய்யான நேசம் கண்டேன்

என்னில் ஏமாற்றம்தான் மிஞ்சியது
உலகில் யதார்த்த அன்பிற்கு மாறுதல் தேடினேன்

அன்புவாழ்வில் மாற்றத்தை தந்த தருணத்தில்
நேற்றைய மாற்றம் இன்றைய விடியல் என எண்ணி
ஆனந்தம் கொண்டேன்.

அன்பு கொடு, யாரையும் ஏமாற்றாதே!
இதற்காக ஏங்கும் உயிர்கள் ஏராளம்!

இதனை தந்து ஏமாற்றும் உயிர்களும் தாராளம்!
மனிதனாக மாற்றம் நோக்கி பயணிக்க
ஏமாற்றும் அன்பர்கள் வேண்டாமே.

ஏமாற்றும் அன்பு வாழவும் வைக்கும்
ஏமாற்றும் அன்பு சாகவும் வைக்கும்.

வாழ்வில் அன்பு ஏமாற்றம் இன்றி போதுமடா
மாறுதல் இல்லா வாழ்க்கை; மாறும் வேலையில் நாமில்லை.

வாழ்வே மாற்றத்தை நோக்கி பயணி
ஏமாற்றமின்றிய வாழ்வு உறவு நமக்காக தேடு.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், இலங்கை

# என் ஆயுளின் பிரதிபலிப்பே!



ஐம்பொன் சிலையே
சந்திரனின் மகளே
என் வாழ்வின் நிழலே
என் எழுத்தின் உருவே
என் வஞ்சமில்லா உறவே
கண் முன்னே நீ
கண்ணாடியின் இதயத்தில்
என் ஆயுளின் பிரதிபலிப்பே.

கவிஞர் ம. ஹரீஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

பேச வேண்டிய நேரத்தில்
மௌனத்தின் சாரலேன்

ஆழ் உணர்வின் அலைகளடக்கி
குவித்து வைத்திடும் கூளமல்ல மனது

பட்டென உடைத்திடு
உரியது பிழைக்கும்!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

பூக்கள் எழுதும் கவிதை
பூக்கும் போது கேட்கும் ஓசை
இன்னிசை.
இன்னிசை மீட்டி இதழில்
பதிந்து புன்னகையாய்
மலர்ந்தேன்.
வாழ்வே ஒரு முறை
வருத்தங்கள் வேண்டாம்.
வாடிடுவேன் என தெரிந்தும்
வாசனை வீசிடுவேன்.
வண்ண வண்ண நிறங்களால்
வானவில் போல் ஜொலித்திடுவேன்.



கவிஞர் உஷா தங்கவேல், அரியலூர்

தொடருமா என்றும் தெரியவில்லை
முடிந்துவிட்டதா என்றும் தெரியவில்லை
ஏதோ ஒரு சிறிய உணர்வு மட்டும்
உன்னை மறக்க வேண்டாம் என்று சொல்கிறது
என் மனதோரமாக!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

இரண்டொரு நாட்கள் கழிந்து இருக்கும்
திரண்ட இரவா பகலா கடிகார
முட்கள் உறைந்து இருக்க கவியெழுத
முட்டுகிற உள்ள தவிப்பு.

இரண்டொரு நாட்கள் கழிந்து இருக்கும்
சுரந்துகொண்டே நீள்கிற எண்ணங்கள் நல்கவிக்கு
தாகித்து நிற்கும் எழுதுகோல் மேலிருக்க
காகிதங்கள் கூடபேசும் காற்று .

இரண்டொரு நாட்கள் கழிந்து இருக்கும்
பரந்து படித்தவள் தேர்வென்று காரணம்
கூறி பிரிந்து இரண்டொரு நாட்களும்
மீறி இருக்கும் கழிந்து.

இலக்கண சுத்தமாய் வெண்பா படைப்பாள்.
இலக்கியங்கள் பேசுவாள் ஆணுக்கு பெண்ணும்
நிகரென சொல்வாள் தலைவனை விட்டு
நகர்ந்ததும் நாளிரண்டு தான்.

பசலையென்று சொல்லும் இலக்கியங்கள் பெண்ணை
பசலைவாட்டும் என்றாள் தலைவன் வருந்தி
பசலைபட மாட்டானா அத்தலைவன் காதல்
வசப்படவே வில்லையா ஏன்.

என்றெல்லாம் வாதிடுவாள் தேர்வென்று சொல்லியவள்
சென்றிரண்டு நாளிருக்கும் முப்போதும் உள்ளம்
ததும்பி இரவும் பகலும் அறியா
வெதும்பி இருக்கும் மனது

இலக்கியங்கள் சொல்லா உணர்வை தலைவன்
இலக்கண சுத்தமாய் சொல்லிடவும் தாகித்து
நாளிரண்டு சென்றிருக்கும் எப்படி தானெழுத
தாளிரண்டில் வாரா உணர்வு.

குறிப்பு :
தலைவனை பிரிந்த தலைவியின் பிரிவு துயரை பசலை நோய் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.இப்பிரிவு துயர் என்னும் பசலை நோய் தலைவனையும் வாட்டும் என்ற கருப்பொருளில் இக்கவிதை படைக்கப்பட்டுள்ளது

கவிஞர் முனைவர். பு. பேச்சிமுத்து, விருதுநகர்

# பெண்களின் திருவிழா

பெண்ணாக பிறந்தாலே முகம் சுழிக்கும் காலம்
போயே போய்விட்டதடி கண்ணம்மா!

அக்கால சில மன்னர்களின் ஆட்சியிலே வந்துவிட்ட பொற்காலம்
இன்றைய காலகட்டத்திலுமே நமக்கும் பொற்காலமன்றோ!
மகளிர் தினம் கொண்டாடும் காலமன்றோ

எத்துறையிலும் பரிணமிக்கும் இக்கால மாதர்கள்
எல்லோரையும் சிந்திக்கவும், செயல்படுத்தியும் செய்கின்றனரே!

சரித்திர கால 'ராணி லக்ஷ்மி பாய்',' ஜான்சிராணி" இருகரம் வாளேந்தி
வாஞ்சையாய் போர் புரிந்தார் ஆங்கிலேயரை முறியடித்தார் .

நம் நாட்டு விடுதலைக்கு அர்ப்பணித்த பெண்களுண்டு
பல இன்னல்களை தாங்கிக்கொண்டு
உயிர்த்தியாகம் செய்தனரே பல வீரப்பெண்மணிகள்.



"எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள் பெண்கள்"
குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்றால்
முக்கிய பங்கு மகளிரையே சேரும்.

"பெண் புத்தி பின் புத்தி" என்பர்
பின்னால் வரும் நன்மை, தீமையை
முன்கூட்டியே கண்டறிந்து தீர்க்கதரிசியாய் ஒளிர்பவள்.

பெண்களே, சோதனைகளையும் சாதனைகளாக்கி
எதிர்நீச்சல் போட்டு வெற்றி காண்போமே!

பெண்மையை அனைவரும் போற்றுவோமே!
அவர்களுக்கு வரும் துன்பத்தை தடுத்து காத்திடுவோமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# அலைகளின் பாட்டு

இயற்கை அன்னைக்கு நீல வண்ணப் பட்டு
வியப்பைத் தருவதோ அலைகளின் பாட்டு
ஓய்ந்திடாமல் ஓடிவந்து கரையைத் தொடுகிறாய்
காய்ந்திடாமல் நுரையை மணல்மீதே பூசிவிடுகிறாய்.

உன்னால்தானே கடலுக்கே பெருமை
உன்னில் கால்பதித்தால் நீக்கிடுவாய் வெறுமை

மகிழ்ந்து வந்தால் சிற்றலையாய் வருகிறாய்
சினம் கொண்டால் காலனையும் உன்னோடு வரவழைக்கிறாய்
உந்தன் பாட்டு சொன்ன பட்டுமொழி புரியவில்லையோ!
எந்தன் மாந்தரினம் அழிவையே அறியவில்லையோ?

சீறிப்பாயும் உன்மீது சற்றே கோபம்
கால்தடம் பதிக்க வரும் மாந்தரிடம் – நீயே
ஆள் இருந்த இடம் தெரியாமல் அழைத்துச் செல்கிறாய்?
உயிர்களின் மதிப்பை நீயுணரவில்லை

இரக்க குணம் நீக்கி அரக்க குணம் காட்டுகிறாய்
கால் நனைக்காத கடல் பயணமும் இல்லை!
கண்ணீர் விடாத வாழ்க்கைப் பயணமும் இல்லையோ?
அலைகளின் பாட்டே
என் கவியைக் கேட்டே மகிழ்வாய்



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# பெண்மையைப் போற்றுவோம்

கரண்டியோ, கணினியோ
புரட்சி விதைகள்
பெண்களை
நகர்த்திக் கொண்டுதான்
இருக்கின்றன.
பெருமழைப்பொழிவோ
காட்டுத்தீயின்
கானக எரிப்போ
ஆழ்மனக்கிடங்குகளின்
ஆதி வரைபடங்களில் தொடங்கி
தாயாய், தமக்கையாய்
மகளாய் மறுஜென்மம்
எடுக்கிறாள்.
மீண்டும் சுமக்கிறாள்.
நிலம் தாங்கும்
பொறுமையில் மிளிர்கிறாள்.
உறுதியான இறக்கைகளில்
திசைகளின் இருள் துடைக்கிறாள்.
வீட்டுச் சுவர்களில்
கோவில் செய்கிறாள்.
தலைக்கனம் அற்ற
தலை நிமிர்வோடு
தலைமுறை தாங்கும்
பெண்மையைப் போற்றுவோம்.



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அழகான சொர்க்கம்



இயற்கை என்னும் பேரழகு தந்திட்ட கொடைதான்
பூமி பந்தில் உயிர்களும் அழகான சொர்க்கம் தான்.

மாசு தூசி இல்லாத
*இயற்கையான காற்றும் தூய்மையான குடிநீரும்*
பூமித்தாய் வழங்கிய அமுதமான கொடையை
அனுபவித்த காலம் மறக்கத்தான் முடியுமா?

மரம் வளர்த்து மழைபெற்ற காலமெல்லாம் மறந்துவிட்டு
காடழிக்கும் தொழிலையே மூச்சாய் கொண்டு செயல்பட்ட
சுயநலம் தான் *காலம் தவறிய மழையால்* அல்லல் வந்து சேர்ந்ததே.

ஆறு குளம் ஏரி எல்லாம் தூய குடிநீராய்
குளித்து குடித்து அனுபவித்த காலங்கள்
மறந்துதான் போனதே.

நீர் நிலைகள் அத்தனையும்
கழிவுநீர் கால்வாயாய் மாறிவிட்ட நிலைதான்
குடிநீரும் *விஷமாய்* மாறித்தான் போனதே.

காளான்கள் போல் பெருகிவிட்ட காங்கிரீட் காடுகளால்
மரம் வளர்க்கும் இடமெல்லாம் காணாமல் போனதே.

பூச்செடி தொட்டிக்குள்ளே மரங்களும்
*போன் சாய்* கலாய் சுருங்கிதான் போனதே
காடுகளின் இடங்களையும கபளீகரம் செய்ததால்
நாட்டுக்குள்ளே மிருகங்கள் நடமாடும் நிலைதான்.

பூமித்தாயின் மார்புகளான மழை தரும்
*மலை காடுகள் கனிமவளங்கள்* கொள்ளை போனதால்
வரும் தலைமுறைக்கு மழை என்பதெல்லாம்
கதைகளில் சொன்னால்தான்.. அப்படி கனவாய் போகும்
நாள்தான் வெகு தொலைவில் இல்லையேதான்.

இயற்கையாய் அனுபவித்த அமுதமான நல்வாழ்வு
இனியும் கிடைத்திட சுற்றுச்சூழல் காத்திடுவோம்
சுகமான வாழ்வுதனை அடுத்த தலைமுறைக்கும்
அப்படியே தந்திடுவோம்.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# வாசிக்காத பக்கங்கள்

அந்த பக்கங்கள்
என்னை துரத்துகிறது
முற்றுப்புள்ளி இல்லாத
முரண்களின் மூச்சுகள்
அன்றாட வாழ்க்கையில்
அதன் துரத்தலும்

படிக்கப் படாத பக்கங்களாக
வைத்திருக்கலாமோ
மனதின் கேள்விக்கு

புத்தகத்தின் வாசனை
புறந்தள்ளியதை என்ன சொல்ல
புதிரோ இதுவென புளுங்கிய
மனதிடம்

நம்மிலே வாசிக்காத பக்கங்கள்
எத்தனையோ
தேற்றியது கலங்கிய விழிகள்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# எனதன்பு இளவரசே!

உன்னோடு நான்,
உனக்காக நான்,
உன்னாலே நான்,
உன்மீது நான்,
உரிமையாக நான்,
உணர்வாக நான்,
உத்தரவாக நான்,
உற்சாகமாக நான்,
உண்மையாக நான்,
உடைமையாக நான்,
உத்வேகமாக நான்,
உச்சரிப்பாக நான்,
உதாரணமாக நான்,
உதிரும் கண்ணீராக நான்,
உள்ளமெல்லாம் பூரிக்கும்போதும்,
உனக்கு புரியாவிட்டாலும்,
உடன் வந்து முத்தமிடுவாயே!
உள்ளுக்குள் அழும்போதும்,
உடனிருந்து சேர்ந்து அழுவாயே!.
உன் பிஞ்சு விரல்களால் துடைத்திடுவாயே,
உன்னைவிட்டு ஒரு நாள் பிரிந்தாலுமே,
உள் சுவாசமும் நின்றிடுமே!
உயிர் உள்ளவரை
உடனிருந்து அளிப்பாயா?
உன் நேசமிகு பாசத்தை!
உன் நேரமும் காலமும்,
உன்னை நேர்த்தியாக மாற்றாமல்,
உண்மையான் அன்பிற்கும்,
உன் அருகாமை வேண்டும்,
உண்டு இல்லையென்று செய்யும்
உன்மத்தமான எனதன்பு இளவரசே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

ஒளியும் விருந்து!
ஒலியும் விருந்து!
இருளும் விருந்து!
இயற்கையும் விருந்து!
காலமும் விருந்து!
காதலும் விருந்து!
சிரிப்பும் விருந்து!
சிந்தனையும் விருந்து!
நட்பும் விருந்து!
உறவும் விருந்து!
விருந்தானதனைத்தும்
மருந்தென உணர்ந்தே அருந்து!
வாழ்க்கை அமையும் சிறந்து!



கவிஞர் பா. அருள்ஜெயந்தி, சிதம்பரம்

# என்னவள்



அவள்
என்னவள்
எனதானவள்
எனக்குமட்டுமானவள்
எனது
எண்ணமெல்லாமவள்.

பார்ப்பவர்க்கு
பரதேசியவள்
எனக்கு மட்டும்
பால்நிலவாயவள்.

நான் தவறு செய்தால்
எனைக் கண்டிக்கும்
ஆசானாய்
ஆகிடுவாள்.

அவள் தவறு செய்தால்
நான் கண்டிக்கும்
மாணவியாய்
மாறிடுவாள்.

எப்போதும் எனக்கு
நல்ல மனைவியாய் இருக்கின்றாள்
என் வாழ்வினில்
நல்ல துணைவியாய்.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல மாத்தளை

# எதிர் கொள்

சின்ன சிட்டு செல்லமே
என் சிங்கார தங்கமே!
பின் நாளில் – நீ
மன மகிழ்வுடன் வாழ
நிகழ்கால வாழ்வினை
நிலையான மன உறுதியுடன்
எதிர் கொள்.

பள்ளி வாழ்வின் பகுதி
சில காலம்.
பருவமெய்திய பெண்ணாய்
காலாகாலம்.
இதற்கிடையே
பட்டப்படிப்புக்காய்
சில காலம்.
சமுதாய கண்ண(ணா)டியில்
சில காலம்.
சான்றோர் வாய் சொல்லில்
சில காலம்.
உன் சாதனை நோக்கிய
பயணத்தில்
ஊர்க்குருவியாய்
இல்லாமல் – உயரம்
பறக்கும் பருந்தாய்
சிறகடிப்பாய்.

அச்சமின்றி துணிந்து
எதிர் கொள்.



கவிஞர் மோகன், நாவலப்பிட்டி (இலங்கை)

## தொண்டரடிப் பொடியாழ்வார்



மாதமொரு ஆதித்யர் பனிரெண்டு சூரியர்கள்!
பதினொன்று ருத்திரர்கள்! தேவர்தம் தளபதியாம்
சண்முகனார்! தேவர்கள், எமகிங்கரர், எண்வசுக்கள்,
தேவதைகள், பரிவாரம், நின்திருக்கண் மலர்வதனைக்
கண்டுமகிழ, நின்கோயில் கோபுரமுன் திரண்டுளர்!
திருவரங்க கண்மலர்க! ஆறாவது உணர்த்தலிதே!
ஏழாவதில் திருவரங்கன் திருக்கோயில் வாசலிலே,
தேவேந்திரன், ஐராவதம், தேவர்கள், பரிவாரம்,
ஸனகாதி முனிவர்கள், மிருதகணம் யக்ஷரோடும்
கந்தர்வர், வித்யாதரர், தொழுநிற்க! மண்ணிடத்தும்,
விண்ணினிலும், இடமிலையே! அரங்கநாத கண்மலர்க!
எட்டாவதில் பிறைதண்ணுமை குழல்வீணை மத்தளமும்
முழங்கிடவும், கின்னரர்கள், கருடர்கள், கந்தர்வர்,
மற்றவர்கள், தேவர்கள், மகரிஷிகள், சாரணர்கள்,
யக்ஷர்களும், சித்தர்கள், நினைவணங்க வந்துள்ளனர்!
காட்சிதர எழுந்தருள்க! ஒன்பதாவதில் மலர்தாமரை
கார்குழலை பிரித்துதரி புத்தாடை உடுத்தியவர்
கரையேறினர்! அருளுக்கு ஏற்றோரை ஆட்கொண்டு
அடியவர்தம் தொண்டதனில் ஈடுபடுத்த கண்மலர்வாய் திருவரங்கா!

கவிஞர் கணக்காயர் (இ. சே. இராமன்)

# சாதீ

நெடுங்கால பழக்கமும் அன்பும்
சாதி எனும் சாக்கடையை மறைக்கிறது
நல்லவன் எனும் போர்வையில் ஒளிந்த தன் விளைவாக
அன்பின் பிடியில் தக்கவைத்து கொள்கிறது
இறுதியில் சாதி எனும் புத்தியே வெல்கிறது
நான் சாதி பார்ப்பதில்லை
சிரிப்பை அடக்கவே முடியவில்லை
கோவத்தில் நெருப்பாய் கொதித்தது உள்ளம்
இறுதியில் இதுவும் கடந்து செல்லும் என்றது அறிவு
அறிவற்றவர்களின் மனநிலையை எண்ணி

சாதீ

கவிஞர் அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# புதிய வரலாறு

அன்றொரு நாள் அடிமையாய் நின்றாள்
அறமறந்து அகல முடியாள்
சுற்றமெனும் சங்கிலியாலே
சூழப்பட்டு தவமிருந்தாள்

கதவுகளுக்குள் சிறைபட்டாள்
கண்ட கனவும் கடந்து போக
ஆண்குரலுக்கு அடங்கிச் சென்றாள்
அவள் சொந்தக் குரல் மறந்து போக

படிக்க விரும்பி பகல் கழித்தாள்
பதிலளிக்கத் தகுதியில்லா
என் உரிமை? என்று கேட்டபோது
ஏகமாய் எல்லாம் மாறிவிட்டது.

கல்வியினால் உயர நின்றும்
கடைக்கணிக்கப் படவில்லை
கோபுரமென எழுந்தாலும்
கோலாகல முனையவில்லை

இன்று காலம் மாற்றமுற்றே
இளமொழியால் உரிமை பெற்றே
மேன்மையுடன் மிளிர்வாளே
வெற்றியோடு உயர்வாளே



இன்று அவளின் பேச்சு வளரும்
இணைய உலகில் இடம் பிடிக்க
கையால் வரைந்து கனவைக் கண்டாள்
கவிழ்ந்த வழிகள் செம்மை பெற்றாள்


வீடெனும் தளத்தில் முடிந்து
வெளிவந்தாள் தனிக்கொளுந்து
எங்குமொரு தடையுமின்றி
எழுந்திருக்கிறாள் பெண்மையுடன்

சுவரின்றி விண்வெளி சென்றாள்
சுயநினைவோடு முடிவெடுத்தாள்
தடைகளை தகர்த்து முன்னேற
தகுதியுடன் சாதனை செய்தாள்

பெண்ணின் காலம் பிறந்துவிட்டது
பயணங்கள் தன்னை வாழ்த்துகின்றது
புரட்சியின் தீபம் ஏந்திக்கொண்டு
புதிய வரலாறு படைக்கிறாள்!

கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# நல்லிணக்கத்தின் ஒளியாய்



நேர்மையின் ஒளியில் பிறந்தவன் நீ,
உணர்வுகளால் உலகை மாற்றுபவன் நீ.
சொல்லின் இனிமை, செயலின் நன்மை,
ரசிக்கச் செய்யும் மழைதூறல் நீ!

நலம் தேடி நின்று உதவிடும் கரம்,
புதுமை தேடி பயணிக்கும் மனம்.
ஆசானாய் அறிவை வழங்கும் நேரம்,
நட்சத்திரம் போலே விளங்கும் பெருமை!

புதிய பயணிகள் பயம் அறிய,
அழகிய வார்த்தைகள் ஆறுதலாய்,
நீ வழங்கும் ஒளிக்கதிராக,
பாசமாய் பொங்கும் அருட்சுடராக!
மாறாத மின்னல் நீ.

நல்லிணக்கத்தின் ஒளியாய் நிலைக்கும்!

கவிஞர் பானு அப்துல்லா

# தொடரும் பயணங்கள்! மலரும் நினைவலைகள்!




என்வாழ்வில் நீவந்து இணைந்த தருணம்
பொன்வசந்தம்! வாழ்க்கையே வண்ணமயமாச்சு!
கதிரவன் உதிப்பதை, மறைவதை, உழைத்தபோது
எத்தனைநாள் இரசித்திருப்போம்! பட்டாம்பூச்சிகளாய்ப் பறந்த
இளமைப் பருவங்கள்! மழையில் நனைந்தபடி
இணைந்து நடந்த இனிய தருணங்கள்!
இன்னும் நம்பயணம் இனிதே தொடர்கிறதே!
அந்திம காலத்தில் அந்திப் போதினிலே
சிந்தனையில் மலர்கின்ற சிதையாத நினைவலைகள்!
கரம்பற்றிய தருணம், எண்ணுகையில் இப்போதும்
பரவசமாய்ப் பாய்கிறதே என்னுள் அதிர்வலைகள்!
வேறிடத்தில் பிள்ளைகள், பெயரன் பெயர்த்திகள்!
பார்த்து மகிழ்வடைய பயணம் தொடர்கிறதே!
சிரித்து மகிழ்ந்தது பலநேரம்! சிந்தினோம் கண்ணீரை
சிலநேரம்! காலத்தின் கதைகளைப் பேசியபடி
களைப்பை விரட்டி பயணத்தைத் தொடர்கின்றோம்!
காலங்கள் ஓடியதைக் காண்கின்றோம் உடலளவில்!
காலம் கழிந்தாலும் காதல் அழியாது!
மலர்ந்திருக்கும் நம்முள்ளே மாறாத அன்பென்றும்!
இணைந்தே பயணிப்போம்! இனிதே வாழ்ந்திடுவோம்!
ஆதரவாய்க் கரம்பற்றி முதுமையிலும் பயணிப்போம்!
அழியாத காதலின் சாட்சிகளாய் நம்பெயரை
எழுதட்டும் எதிர்காலம்! வாழ்த்திடுவோம் உறவுகளை
வாழையடி வாழையாகத் தழைத்தோங்கி வாழ்கவென!

கவிஞர் ஏ. தீ. சேஷாத்ரி

# நல்ல நட்பே

நான் தொலைத்த நல்ல நட்பே
நாட்கள் கடந்து வந்த நட்பே
வருடம் கடந்தும் நீலும் நட்பே
வறுமையிலும் கரம் தந்த
கருணை நட்பே
விழி வடிக்கும் கண்ணீரை
விரல் நீட்டி விளக்கும் நட்பே
விருந்தாக உனைமீட்டி
விருட்சமென எனை மாற்றினேன்
தொலைதுரம் இருந்து கொண்டே
தொடர்வோமே நல்ல நட்பே




கவிஞர் பரிமளா மணி, இலங்கை

# புத்தக வெளியீடு

## தன்முனைக் கவிதைகள்

தனிமையான இரவுகளிலும்
பிரகாசமான நாட்களிலும்
துளிர்க்க ஆரம்பித்தது
மலர்ந்து வளர்ந்தது

வாசகனை ஈர்க்கும்
வார்த்தைகளின் பின்னல்
புத்தகமென்பது முழு பலத்துடன்
ஒரு காட்சி விருந்து




வரிக்கு வரி ஒரு உலகம்
ஆழமான உழைப்பில்
வெளியீட்டாளரின் கனவு

கையெழுத்துப் பிரதியிலிருந்து
புத்தகம் வரை
வடிவமைக்கப்பட்ட கனவு
சிறகுகள் கொண்ட நனவு

இறுதியாக வந்தது
வெளியீட்டு நாள்
சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும்
ஒரு கதை காத்திருக்கிறது

கவனமான ஆதாரம்
மற்றும் விடாமுயற்சி
ஒரு தலைசிறந்த
படைப்பு வெளிப்படுகிறது.

தாழ்மையான தொடக்கத்திலிருந்து
இறுதி வரை இதயங்களை அலங்கரிக்க
நேசத்துக்குரிய பொக்கிஷம்

கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# காதல் இல்லாக் காதல் ஹைக்கூக்கள்



பிரிகிறாயா போ
ஏங்காமல் நினைக்கும்படி
முத்தம் இட்டபின்
*

அப்பிய அத்தனை சோகத்தையும்
அழித்துவிட முடிகிறது
ஒற்றை முத்தத்தால்
*

கறுப்புச்சட்டை
தேவையில்லை
கடவுளாய் நீயிருந்தால்
*

மனதைத் திருடினாய்
முத்தலஞ்சம் தருகிறாய்
அன்பை மறைத்து
*

அவதாரம் எடு
தெய்வமாய்த் தொழுகிறேன்
மனதைத் தொலைத்து
*

எல்லாவற்றையும்
பிடுங்கிவிட்டாய்
இனிக்கும் முத்தத்தை..
*

"அன்புடன்'
இல்லாத கடிதம்
அவசரமாய் எழுதினாயோ.
*

சோகம் அப்பி
சோம்பல் நிறைந்திருக்கையில்
எழுப்புவாய் முத்தத்தால்.
*

எங்கே கற்றாய்
எழுத்துக்கும் நோகாமல்
எழுதும் கலை
*

வெப்பச் சூறாவளியாய்
வெயில் குற்றாலமாய்
கலவரப்படுத்துகிறாய்
*

எல்லா நேரங்களும்
எளிதாகக் கரைகிறது
உன்னை நினைத்ததும்

கவிஞர் இளையவன் சிவா

நண்பர்களுடன்
கிரிக்கெட் உரையாடல் ,
மேட்சை காட்டிலும் சிறந்தது
***

சாக் பீசால் கீறினால்
தெர்மோகோல் சுரண்டினால்
கூஸ்பம்ஸ் வரும் எனக்கு
***

வானத்திற்கும் பூமிக்கும்
குதிக்கும் மனிதன்
"பிறப்பு இறப்பு "
***

விமானத்திற்கு
காகங்கள் வியப்பதில்லை
பறப்பது நமக்கு தான் புதிது'
***



இடாப்புகளின்
குடாப்பு
சமூக வலைதளம்
***

ஆர வாரம் வேண்டாம்
கடைசி ஆரம் கூட
சொந்தமில்லை
***

நண்பனுக்கு பிறந்த நாள்
அவனை விட நான் சந்தோசமாக உள்ளேன்
நட்புதான் எத்துணை உன்னதம்
***

உள்ளங்கையை விரித்து பார்க்கும்
குழந்தைக்கு
வெறும் கையை பரிசளிக்க
எப்படி மனது வரும்
***

ஒரிஜினல்
ஒயிட் காலர் ஜாப்
சலவைக்காரன்
***

ஆண்
மன அழுத்தத்தை
உடலில் பிரதிபலிக்காதவன்
***

ஒரு பாடல் முடிவதற்குள்
அவளுடனான
ஒரு பயணமே முடிந்து விடும்
என் மனதில்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

அன்பாய் அமைதியாய்
ஆறுதலாய் அழகாய்
பண்பாய் பாசமாய்
முயற்சியாய் வெற்றியாய்
அனைத்துமாய் ஆகிப்போனாள்
பெண்!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

ஒவ்வொரு மாதமும்
பிரசவ  வலியை அனுபவிக்கிறாள்,
பிள்ளை இல்லா வெள்ளை நிலா.



கவிஞர் ஞா. மணிமாறன், இரெட்டியூர்

அன்பு காட்டும்அன்னையாய்
அரவணைக்கும் அக்காவாய்
தாலாட்டும் தங்கையாய்
தடம் மாறும் போது
தோள் கொடுக்கும் தோழியாய்!
காதலிக்கும் காதலியாய்!
இப்படி பல வடிவங்களில்
எங்களின் உள்ளே கலந்திட்ட
உயிராய்! இருக்கும் உங்களுக்கு
ஓர் நாள்
மகளிர் தினப்பெருநாள்!



கவிஞர் தினேஷ் கண்ணா, வழுதாவூர்

## அதிகமான லாபம்

## அத்தியாயம் 1

அந்த மொத்தக் கம்பெனியின் இயக்குனர்கள் கூட்டம் ("போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ்" கூட்டம்) மிகவும் ஆரவாரமாக நடந்து முடிந்ததும் வெளியே வந்த ஜே.கே யை எல்லோரும் சூழ்ந்து கொண்டனர்.




"என்ன ஜே.கே. நீங்கள் இந்த வருடம் அதிகமான லாபம் வந்திருப்பதால் முப்பத்தைந்து சதவீதம் போன்ஸ் கொடுக்கலாம் என்று அறிவித்திருக்கிறீர்களே? அடுத்த வருடமும் நாம் இதே அளவிற்கு கொடுக்க முடியுமா என்று யோசித்துப் பார்த்தீர்களா?" டைரக்டர் செங்குப்தா கேட்டார்.

ஒரு நிமிடம் மௌனம் சாதித்த ஜே.கே. "நீங்களெல்லாம் டைரக்டர் என்று சொல்லிக் கொண்டு புடுங்கதுக்கா உட்கார்ந்திருக்கீங்க. என்று கத்த நினைத்தவர்," தன்னைச் சுதாரித்துக் கொண்டு "செங்குப்தா நீங்களும் கம்பெனியின் ஒரு டைரக்டர். அடுத்த வருடம் இதைவிட எவ்வளவு நமது கம்பனி வேலையாட்களுக்கு போனஸ் தரமுடியும். அதற்கு நாம் எவ்வளவு உழைப்பைத் தர வேண்டும் என்று யோசியுங்கள்.மேலும் இந்த அளவிற்கதிகமான லாபம் நம்முடைய கம்பெனியின் ஒவ்வொரு தளத்திலும் பணிபுரிகின்ற ஒவ்வொருவரையும் பிழிந்து எடுத்த வருமானம். அதில் ஒரு பகுதியேனும் திரும்பவும் அவர்களுக்குப் போகவேண்டாமா?" என்று திருப்பிக் கேட்டார்.

"ஜே.கே. போனஸ் கொடுக்க வேண்டாம் என்று சொல்ல வில்லையே நான். ஆனால் முப்பத்தைந்து சதவிகிதம் அதிகம் என்கிறேன்." செங்குப்தா கொஞ்சம் முறைத்துக் கொண்டு சொன்னார்.

"ஏய்யா நீ வாங்குற இரண்டு லட்ச ரூபாய் சம்பளத்திற்கு பத்தில் ஒரு பகுதியாவது வேலை செய்வாயா? செய்தவனுக்கு கொடுப்பதில் உனக்கென்னக் குறையப் போகிறது? உன் அப்பன் வீட்டு பணத்தையா எடுத்துக் கொடுக்கிறோம்?" என்று திட்ட நினைத்தவர் "மிஸ்டர் செங்குப்தா நேரடியாகவோ, மறைமுகமாகவோ நமக்கு எவ்வளவு லாபம் ஈட்டிக் கொடுத்துள்ளனர். இது ஒரு நன்றிக்கடந்தான்.

**அதிகமான லாபம்** **அத்தியாயம் 1**

முதலில் எல்லோருமே ஐம்பது சதவிகிதம் போனஸ் கொடுக்க வேண்டும் என்று சொல்லிய போது நீங்கள் வெளிநாடு சுற்றிவிட்டு திரும்பினீர்கள். கம்பெனி அளவிட்டதை விட பன்னிரெண்டு மடங்கு அதிகமாக செலவழித்து மாமன் மச்சான் எல்லோரயும் கூட்டிக்கொண்டு சுற்றிவிட்டு வந்தீர்கள். வேலை செய்தவனுக்கு போனஸ் கொடுக்கச் சொன்னால் உங்களுக்கு வலிக்கிறது அப்படித்தானே'' ஜே.கே. கொஞ்சம் வேகமாகப் பேச ''உங்களுக்கு இந்த செங்குப்தாவை மட்டம் தட்டுவதென்பது அல்வா தின்ன மாதிரி அப்படித்தானே?. வாருங்கள் செங்குப்தா என் அண்ணா அப்படித்தான்'' என்று செங்குப்தாவை இழுத்துக் கொண்டு போனாள் ஜே.கேயின் தங்கை பத்மினி..

"பத்மினி நீ ஒரு பெங்காளியைக் கல்யாணம் செய்து கொண்டு.. நீயும் என் தங்கை என்று உன் கணவன் செங்குப்தாவை நான் கட்டி அழுது கொண்டிருக்கிறேன்."

"அண்ணா மெதுவாகப் பேசுங்கள். அவருக்கு தமிழ் நன்றாகப் புரியும். வீட்டிற்குப் போனதும் காச் மூச்சென்று கத்த ஆரம்பித்து விடுவார்."

"இப்படிச் சொல்லியே என்னை அடக்கி விடு. புருஷனை எதிர்த்து பேசாத உண்மையான தமிழச்சி" என்று வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டதும் மொபைல் போன் பாடியது.

போனை எடுத்து ''ராணி என்ன விஷயம்?" என்று கேட்டார்.

"உடனே வீட்டிற்கு வாருங்கள். திரும்பவும் நமது மகன் அரசுவைக் காணவில்லை." என்றாள். எதிர் முனையில் அவர் மனைவி ராணி.
"அவன் என்ன சின்னக் குழந்தையா? எஞ்சினியரிங் முடித்து விட்டு என் பிஸினஸைக் கவனிக்காமல் ஊரைச் சுற்றிக் கொண்டு திரிகிறான் அவன். மொபைலில் அவனைக்கூப்பிடு."

"நீங்கள் ஆபீஸ் என்று தவம் கிடக்கிறீர்கள். மூன்று நாட்களாக அவன் வீட்டிற்கு வரவில்லை. செல்போன் வீட்டிலேதான் இருக்கிறது. அவன் எடுத்துக் கொண்டு போகவில்லை. எனக்குப் பயமாக இருக்கிறது."

"அய்யோ நீ ஒரு தொட்டாச்சிணுங்கி. எதற்கெடுத்தாலும் உடனே அழ ஆரம்பித்து விடுவாய். சரி...சரி. நான் கிளப்பிற்கு போவதை நிறுத்தி விட்டு வீட்டிற்கு

வருகிறேன். ஆமாம் அவன் நண்பர்கள் வீட்டிற்கு போன் பண்ணிப் பார்த்தாயா?"

"எல்லோர் வீட்டிற்கும் பேசியாகி விட்டது."

"சரி..சரி. அழாதே. நான் இதோ வந்து விடுகிறேன்." என்று தொடர்பைத் துண்டித்து விட்டு திரும்ப அதே செல்போனில் வேறு ஒரு எண்ணைத் தேடி "ஹலோ ஜே.கே. பேசுகிறேன். அரசுவை மூன்று நாட்களாகக் காணவில்லை. வெளியே தெரியாமல் இரகசியமாக கொஞ்சம் தேட முடியுமா?" என்று கேட்கும்போது கொஞ்சம் நடுக்கம் காத்திருந்தது.
"என்ன ஜே.கே. பயந்திருக்கிறீர்கள். நான் உங்கள் வலது கை. இந்த பாபு இருக்கும் வரை ஏன் வீணாக கலக்கம்?. நான் உங்கள் செக்யூரிட்டி ஆபிஸர் மட்டுமல்ல. ஆருயிர் நண்பன். உங்கள் அன்பின் ஆலோசகன். ஏதாவது வீட்டிலே சண்டை சச்சரவுகள் உண்டா." என்றது எதிர் முனை.



தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# முனைவர் வ.ஐ.சுப்பிரமணியம்

## கட்டுரை



வ. ஐ. சுப்பிரமணியம் என அறியப்படும் வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம், (18 பெப்ரவரி 1926 - 29 சூன் 2009), தமிழ்நாட்டைச் சேர்ந்த மொழியியல் அறிஞர் ஆவார். இவர் 1981 முதல் 1986 வரை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பணியாற்றினார். குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் முதல் இணைவேந்தராகவும் விளங்கியவர்.

### தொடக்க வாழ்க்கையும் கல்வியும்

இன்றைய தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத் தலைநகர் நாகர்கோயிலின் ஒரு பகுதியான வடசேரியில் 18 பெப்ரவரி 1926 அன்று பிறந்தார். வடசேரியில் தொடக்கக் கல்வி, திருநெல்வேலியில் உள்ள மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரியில் இடைநிலைக் கல்வி. பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்றார். ஐக்கிய அமெரிக்காவின் இந்தியானா பல்கலைக்கழகத்தில் சென்று மொழியியலில் முனைவர் பட்டம் பெற்றார்.

சில காலம் புது தில்லியில் அனைத்திந்திய வானொலியிலும் பணியாற்றினார். பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளையின் தொடர்பைப் பெற்றார். கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை வளர்ச்சியிலும் மொழியியல் துறை வளர்ச்சியிலும் மிகப்பெரிய பங்களிப்பு செய்தவர்.

### தமிழ்ப்பணி

புதுச்சேரியில் மொழியியல் நிறுவனம் உருவாகவும் தமிழ்ப்பல்கலைக்கழகம் செழித்து வளரவும் காரணமானவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இருமுறை துணைவேந்தராகப் பணியாற்றியவர்.

ஆந்திராவில் உள்ள குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் மூலகர்த்தாவாக விளங்கியதுடன் அதன் முதல் இணைவேந்தராகவும் விளங்கியவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றம் பெறவும் காரணமானவர். உலகத்தமிழ் மாநாடுகளைத் தனிநாயகம் அடிகளார் நடத்த உறுதுணையாக இருந்தவர்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

## மொழியியல் ஆய்வு

"புறநானூற்றுச் சொல்லடைவுகள்" என்ற இவர் ஆய்வுநூல் குறிப்பிடத்தக்கது. பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியவர். அண்மையில் இவரது "வ.ஐ.சுப்பிரமணியன் கட்டுரைகள்" 2 தொகுதிகளாக வந்துள்ளன. முறையே மொழியும் பண்பாடும், இலக்கணமும் ஆளுமைகளும் என்ற தலைப்பில் அவை வெளிவந்துள்ளன. இவர் பொதுப் பதிப்பாசிரியராக இருந்து பல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.



திராவிடமொழியியல் பள்ளியின் நிறுவனராக இருந்து அதன்வழி பல ஆய்வு மாநாடுகள் நடத்தியவர். ஆங்கிலத்தில் இதழ் வெளியிட்டவர்.

இவர் மேற்பார்வையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட முனைவர் பட்ட ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. மொழியியல் துறையில் இவர் ஆற்றிய பங்களிப்புகளுக்காக இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தமிழ் பல்கலைக்கழகம் ஆகியன முனைவர் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தன.

## தமிழ்நாடு அரசின் சிறந்த நூலாசிரியர் விருது

இவர் எழுதிய "வ. ஐ. சுப்பிரமணியம் கட்டுரைகள் தொகுதி ஒன்று - மொழியும் பண்பாடும் இரண்டு - இலக்கணமும் ஆளுமைகளும் (இரண்டு தொகுதிகள்)" எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2007 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்களில் மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

## மறைவு

சுப்பிரமணியம் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவம் பயனளிக்காமல் 29 சூன் 2009 அன்று கேரள மாநிலத் தலைநகர் திருவனந்தபுரத்தில் உயிரிழந்தார்.

நாளை

# நமதே

எந்த ஒரு செயலையும்

ஆர்வம் குறையாமல்

நம்பிக்கையுடன்

செய்தால் வெற்றி

நம்மை தேடி வரும்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே    முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com